## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 15–ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 3 வது சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **காளீஸ்வரன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**15.07.2025 OS.No. 38/2022 வா.சா.3 ஆஜர்**

**<u>(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எந்த ஆண்டு பிறந்தேன் என்றால் 1988 ம் ஆண்டு பிறந்தேன் . 1980 ம் ஆண்டில் தாவா சொத்தை யார் அனுபவம் செய்து வந்தார் என்பது எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் நேரடியாக தெரியாது . எனது அப்பா சொல்லி தெரியும் . பிரதிவாதியின் வீடு தாவா சொத்திற்கு எந்த திசையில் உள்ளது என்றால் கீழ்புறம் உள்ளது . பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் வீடு உள்ளது . பிரதிவாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் என்ன உள்ளது என்றால் நத்தம் காலி மனை உள்ளது .பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் எனது காலி மனை உள்ளது . பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் வீடு உள்ளது . பிரதிவாதியின் வீடு வாசல் எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு பக்கம் உள்ளது . மேற்கு பக்க வாசலில் இருந்து எந்த திசையில் சென்றால் சிமெண்ட் ரோட்டிற்கு போகலாம் என்றால் வடபுறம் சென்றால் சிமெண்ட் ரோட்டிற்கு போகலாம் . பிரதிவாதியின் வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் மேற்படி சிமெண்ட் ரோடு உள்ளது என்றால் 20 மீட்டர் தொலைவில் இருக்கும் . வாதியின் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் தான் நடந்து சிமெண்ட் ரோட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான் . பிரதிவாதி சிமெண்ட் ரோட்டிற்கு செல்ல மேற்கண்ட ஒரு வழி தான் உள்ளது என்றால் சரிதான் . அந்த ஒரு வழி பாதைக்கு தான் வாதிகள் நிரந்தர உறுத்துக் கட்டளை படி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணமான அடங்கல் பதிவேட்டில் புல எண்.195/14 என்பது சர்க்கார் புறம்போக்கு பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் .பிரதிவாதிக்கு மேற்படி ஒரு பாதை தான் உள்ளது. எனவே வாதிகளுக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam